தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989, பிப்ரவரி 20, திங்கட்கிழமை.

மாசி 9, விபவ—திருவள்ளுவர் ஆண்டு-2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் சாத்தையா என்கிற அவர்கள் தலைமையில் பேரவை கூடியது

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்".

எண்ணியவற்றைச் செயற்படுத்துவதில் உறுதியுடையவராக இருந்தால் அதனை எண்ணியவர் எண்ணியவற்றை எண்ணியவாறே எய்துவார்.

[குறிப்பு: ஓர் உரையின் துவக்கத்தில் * உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. உரிமைப் பிரச்சினை—

"நமது எம்.ஜி.ஆர்." நாளிதழ் மீது

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, நான் தங்களிடம் சபை உரிமையை மீறி இருக்கக்கூடிய ஒரு பத்திரிக்கை சம்பந்தமாக ஓர் உரிமைப் பிரச்சினையைத் தந்திருக்கிறேன். குறிப்பாக 14 ஆம் தேதியன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் பேசி இருக்கக்கூடிய பேச்சு 'நமது எம்.ஜி.ஆர்.' என்ற பத்திரிக்கையில் திரித்து, புரட்டி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. 15 ஆம் தேதி இதழில் கருணாநிதி ஆட்சியில் குடிசைத் தொழில்போல் கள்ளச் சாராயக் கடைகள் பெருகிவிட்டன என்று நான் குற்றம் சாட்டியதாக அதில் கூறியிருக்கிறார்கள். அந்த வாசகங்களை மட்டும் நான் கூற விரும்புகிறேன். "கருணாநிதி ஆட்சியில் குடிசைத் தொழில் போல கள்ளச் சாராயம் நடைபெறுவதாக மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் பாப்பா உமாநாத் குற்றம் சாட்டினார். தி.மு.க. ஆட்சியில் தெருவுக்குத் தெரு கள்ளச் சாராயம் விற்பனை செய்யப் படுகிறது. குடிசைத் தொழில்போல ஒவ்வொரு வீட்டிலும் கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டு வருகிறது. 'நமது எம்.ஜி.ஆர்.' நாளிதழில் செய்திகள் வந்த வண்ணம் இருந்தாலும், திராவிட

முன்னேற்றக் கழக அரசு கண்டு கொள்ளவில்லை" என்று சொல்லி, பிறகு அவர்கள் கூறுகிறார்கள். "இதைப் பற்றி பாப்பா உமாநாத் கூறியதுடன், திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி வைத்து, வெற்றி பெற்ற மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் பாப்பா உமாநாத் சட்டசபையில் இப்போது பேசி, தி.மு.க. வினர் செயல்களையும், போலீசாரின் நிறமையின்மையையும் அம்பலப் படுத்தியிருக்கிறார்கள்" என்று கூறியுள்ளார்கள். நான் பேசிய பேச்சு அவ்வாறல்ல என்பதை அவை அறியும். அதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். எனவே இது சபையினுடைய உரிமையை மீறக்கூடிய பிரச்சினை என்பது மட்டுமல்ல இந்தப் பத்திரிகையினுடைய நிறுவனராகவும், பிரசுரகர்த்தாவாகவும் இந்த அவையின் எதிர்க் கட்சித் தலைவர் இருக்கிறார் என்பதால், இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக பேரவைத் தலைவர் விடை சொன்ன பிறகுதான் தாங்கள் எழுப்ப வேண்டும். இது குறித்துப் பத்திரிகை ஆசிரியருக்கு எழுதி, விளக்கம் கேட்டு, பின் என்னுடைய தீர்ப்பை அறிவிக்கிறேன்.

2. தகவல் கோரல்.

(அ) மின் கட்டண பாக்கிக்காக மின் துண்டிப்பு செய்வதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயம் சம்பந்தப்பட்ட முக்கியமானதொரு விஷயம் சம்பந்தமாக மாண்புமிகு மின்சாரத் துறையினுடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வந்து, இந்த அவையிலே அமைச்சர் அவர்களுடைய பதிலை எதிர் பார்க்கிறேன். கடந்த காலத்தினுடைய மின்சார பாக்கி சம்பந்தமாகச் சொல்ல விரும்புகிறேன். 5 குதிரை சக்தியுள்ள மோட்டார்களை வைக்காமலேயே, அக்ரிமெண்ட் எழுதிக் கொடுத்தவர்களிடமிருந்து 3 குதிரைச் சக்தி மோட்டாருக்குரிய பணம்தான் வசூலிக்கப்பட்டு வந்தது. இப்போது 5 குதிரைச் சக்திக்குரிய பணம் கட்ட வேண்டுமென்று காரணம் சொல்லி, பல இடங்களில் மின் இணைப்புத் துண்டிப்பு நடந்து கொண்டு வருகிறது. மிகவும்